


காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற "வெல்லும் தமிழ்ப் பெண்கள் "ஸ்டாலினின் மகளிர் படை பரப்புரை பயிற்சி கூட்டத்தில் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் ஒன்றிய குழுத் தலைவர் எல்.இதயவர்மன், துணைத்தலைவர் சத்திய சேகர், மாவட்ட பொருளாளர் வெ. விசுவநாதன், திருப்போரூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பையனூர் எம்.சேகர், பேரூர் செயலாளர் மு.தேவராஜ், செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச்செழியன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சசிகலா மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட வர்த்தக அணி மற்றும் திருவேற்காடு நகர் 7 வார்டு திமுக சார்பில் மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜே. பவுல் ஏற்பாட்டில் நகரக் கழகச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி முன்னிலையில் திருவேற்காடு கீழ் அயனபாக்கத்தில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு 2000 நபர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் பிரியாணி அத்தியாவசிய பொருட்கள் வழங்கினார் உடன் மாவட்ட நிர்வாகிகள் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ் , பா.நரேஷ்குமார், எஸ்.சங்கர், கவுன்சிலர் ருக்மணி பவுல், நிர்வாகிகள் மா.வினாயகம், அ.க.நடராஜ், ஜெ.சரவணன், செல்லதுரை, தெய்வசிகாமணி, ஐ.ஜேக்கப், செல்லதுரை, என். ராஜ், அப்பு(எ) ஜெபராஜ், ப.சக்ரவர்த்தி, மற்றும் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.


### அ.தி.மு.க. அரசு கொண்டு வந்ததாகக் கூறிக்கொள்ளும் 11 மருத்துவக் கல்லூரிகளைக் கட்டுவதற்கு

# 98 சதவிகிதம் செலவு செய்தது - தி.மு.க. ஆட்சி!

## சட்டப்பேரவையில் — அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!

**சென்னை, பிப்.24**

**சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பேசிய போது குறுக்கிட்டு விளக்கம் அளித்த பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, "அ.தி.மு.க. அரசு கொண்டு வந்ததாகக் கூறிக் கொள்ளும் 11 மருத்துவக் கல்லூரிகளைக் கட்டுவதற்கு 98 சதவிகித செலவு தி.மு.க .ஆட்சியில் தான் செய்யப்பட்டது " என்று ஆதாரங்களுடன் விளக்கம் அளித்தார் .**



அமைச்சர் எ.வ. வேலு இதுகுறித்து குறிப்பிட்ட தாவது:-

எதிர்க்கட்சித் தலைவருக்கு, நான் சொல்லும் கருத்து உங்களுக்கு உதவியாகத்தான் இருக்கும். (குறுக்கீடு) அதாவது, நான் ஒன்றும் அந்த ஆட்சியில் தவறு செய்தார்கள் என சொல்லவில்லை.

11 மருத்துவக் கல்லூரியை ஒன்றிய அரசாங்கத்தின் மூலமாக பெற்றீர்கள்; இல்லை என்று மறுக்கவில்லை. அங்கு கட்டடம் கட்டப்பட்டது. அதையும் நான் மறுக்கவில்லை. அந்த 11 கல்லூரியையும்கூடச் சொல்ல விரும்பவில்லை. ஊட்டியில் ஒரு கல்லூரி. அந்தக் கல்லூரியினுடைய திட்ட மதிப்பீடு 413 கோடி ரூபாய், நீங்கள் அறிவித்தீர்கள். கட்டடம் துவக்கப்பட்டது. ஆனால், . . . ஒன்றே ஒன்றை மட்டும், 11 கல்லூரிகளில் ஒரே ஒரு கல்லூரியை மட்டும் சான்றிற்காகக் சொல்கிறேன்.

நீங்கள் அறிவித்தீர்கள்; திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்தீர்கள்; ஆனால் அது கட்டப்படவில்லை. எவ்வளவு செலவு செய்திருக்கிறீர்கள்? ஆட்சியில் இருக்கும் போது 7 கோடி ரூபாய் செலவு செய்தீர்கள். இரண்டே இரண்டு சதவிகிதிம்தான் செலவு செய்திருக்கிறீர்கள். ஆக, மீதம் 98 சதவிகித பணியின்போதுதான் இந்த ஆட்சி வந்தது, அதனால் கடன்வாங்க வேண்டியிருந்தது என்று சொல்கிறேனேதவிர நீங்கள் அறிவிக்கவி ல்லை; கல்லூரி வாங்கவில்லை என்று சொல்லவில்லையே! கடன் எப்படிப் பெறப்பட்டது என்பதற்கு விளக்கம் சொல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் எ.வ. வேலு குறிப்பிட்டார்.

### "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை"யை முடக்குவதற்கான சதியை

# மதிநுட்பத்தோடு முறியடித்தவர், முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## சட்டப்பேரவையில் — நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்!

**சென்னை, பிப்.24**

**சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, கலைஞர் உரிமைத் தொகையாக 5000 ரூபாயை திராவிட மாடல் அரசு வழங்கியது குறித்துப் பேசிய போது குறுக்கிட்ட நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, "கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை முடக்குவதற்கான சதியை மதிநுட்பத்தோடு முறியடித்தவர் நமது முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்" என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.**



நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு இது குறித்து குறிப்பிட்டதாவது:

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ ஒரு கற்பனையான ஒரு விஷயத்தில் அரசு செய்தது என்று சொல்கிறார். அது கற்பனை அல்ல. என்னென்ன செய்திகள் டெல்லி மாநகரத்தில் நடந்தது. யார் நீதி மன்றத்தினுடைய கதவுகளை ஏற்கெனவே போய் தட்டினார்கள். அது எப்படிப்பட்ட வலை பின்னப்பட்டது என்பதையெல்லாம் தன்னுடைய நுட்பமான மதி நுட்பத்தால் உணர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) அறிந்து, அந்த சதியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முறியடித்தார்கள்.

இன்னும்கூட சொல்ல வேண்டுமென்றால் அகத்தியருடைய வரலாற்றில் ஒன்றை சொல்வார்கள். அகத்தியருடைய வரலாற்றில் வாதாபி அவர் ஒரு பழத்தினுடைய உருவத்திலோ அல்லது ஆற்றினுடைய உருவத்தில் ஆகிவிடுவது என்றும், அவர் தந்திரமாக அகத்தியருடைய வயிற்றுக்குள்ளே போய், அகத்தியரை உண்டுவிட்டவுடன், வயிற்றை கிழித்து க்கொண்டு அவர் வர வேண்டுமென்று, அந்தத் திட்டமெ ல்லாம் தீட்டி, அந்தத் திட்டம் அகத்தியருக்கு தெரிந்த காரணத்தால் அவர் வாதாபி சுவாகா என்று உள்ளே போய், அந்த வாதாபி வயிற்றைக் கிழித்துக்கொண்டு வருவதற்குமுன் "வாதாபி ஜீரணம் பவ" என்று சொல்லி, அந்தச் சதித் திட்டத்தை, எப்படி அகத்தியர் வயிற்றுக்குள்ளே முடித்துவிட்டாரோ, (மேசையைத் தட்டும் ஒலி) அதை போல,நான் புராணக் கதையை எதற்கு சொல்கிறேன் என்றால் அது உருவாகிறபோதே, இந்தச் சதித் திட்டம் எதற்காக உருவாகிறது என்பதை உணர்ந்து "வாதாபி ஜீரணம் பவ" என அதை ஜீரணித்துவிட்டதுபோல (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் அந்த சதி திட்டம் உருவாகிறபோதே மதி நுட்பமாக அறிந்து, உணர்ந்து அதை அங்கேயே அதற்கான முடிவுரையை எழுதிவிட்டார் என்பதுதான் நிதர்சனம். அது உங்களுக்கும் தெரியும், எங்களுக்கும் தெரியும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பி ட்டார்.

### அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த சிறுமியர் பாலியல் கொடுமைகளுக்கு

# இழப்பீடு கொடுத்தது 'திராவிட மாடல்' ஆட்சி!

## சட்டப்பேரவையில் — அமைச்சர் கீதா ஜீவன் விளக்கம்!

**சென்னை, பிப்.24**

**சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் குறுக்கிட்டு விளக்கம் அளித்த சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், "அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த சிறுமியர் பாலியல் கொடுமைகளுக்கு இழப்பீடு கொடுத்தது இந்த திராவிட மாடல் ஆட்சி!" என்று குறிப்பிட்டார்.**

இது தொடர்பாக அமைச்சர் கூறியதாவது:

POCSO சட்டம் 2012ல் கொண்டுவரப்பட்ட சட்டம். அதற்காக POCSO இழப்பீட்டு நிதியம் என்ற ஒரு நிதியத்தை உருவாக்குவதற்கு கடந்த ஆட்சிக் காலத்தில் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. என்றைக்கு நீதிமன்றத்தில் தீர்ப்பு ஆகிறதோ, அன்றிலிருந்து அந்த இழப்பீட்டு நிதி அரசால் வழங்கப்பட வேண்டும். அந்த நிதி அப்படியே இருந்தது. நம்முடைய ஆட்சி 2021ல் வந்தவுடன், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த இழப்பீட்டு நிதியத்திற்கு SOP எல்லாம் போட்டு, என்ன நடைமுறைகளில் நாம் நிதி வழங்க வேண்டும் என்று நிர்ணயித்து, நாம் நிதியை வழங்கத் தொடங்கினோம்.



அதில் சுமார் 6,900 பெண் குழந்தைகளுக்கு அந்த நிதியை இவ்வளவு கொடுத்திருக்கிறோம் என்பதை அறிவித்தோம். அது, 2012 முதல் இன்றைய நாள் வரைக்கும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளுக்கு என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்த POCSO சட்டத்தில் பார்த்தீர்களென்றால் குழந்தைத் திருமணம், அவர்கள் தாங்களாகவே விருப்பப்பட்டு செய்கிற திருமணம், அந்தத் திருமணங்களும் POCSO சட்டத்தின்கீழ்தான் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. அதனால்தான் அந்த எண்ணிக்கை அதிகரிக்கிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன் குறிப்பிட்டார்



மதுரவாயல் தெற்குப் பகுதி, வார்டு150, பாகம் எண்.102, காரம்பாக்கம், பிள்ளையார் கோயில் தெருவில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை நிகழ்ச்சியை மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வெல்லும் தமிழ் பெண்கள் தொகுதி பொறுப்பாளர் ஆ.மாலினி எம்.சி., வட்ட கழக செயலாளர் சி.சுந்தர், மாமன்ற உறுப்பினர் ஹேமலதா கணபதி எம்.சி., வட்ட அவைத் தலைவர் மு.ஆறுமுகம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மா.பா.சித்ராலயம், ஏ.கவுஸ்பாஷா, ஏ. ராகேஷ், வட்டக் கழக நிர்வாகிகள் ஆர்.லதா, எஸ்.தில்லைவாணன், இ.ஜெயவேல், பகுதி அமைப்பாளர்கள் நரேன் கணபதி, எஸ்.நித்தியானந்தம் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள் (BLA2), பாக மகளிர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# ஒற்றைச் சாளர முறையில் - 'முனைவர்' படிப்பிற்கான மாணவர் சேர்க்கை!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் கோவி.செழியன் அறிவிப்பு!

**சென்னை,பிப்.24-**

**உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஒற்றைச்சாளர முறையில் முனைவர் பட்டப் படிப்பிற்கான (Ph.D) மாணவர் சேர்க்கை குறித்து 19.02.2026 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-**

தற்போதுள்ள நடைமுறைகளின்படி, முனைவர் பட்டப்படிப்பிற்கான (Ph.D) மாணவர் சேர்க்கை இடஒதுக்கீடு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதிலும், சேர்க்கை வழிமுறைகளிலும் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பெரியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்கள் ஏற்கனவே, தங்களது பல்கலைக்கழக அளவில் முனைவர் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைக்கு ஒற்றைச்சாளர முறையில் (*Single Window System*) செயல்படுத்தி வருகின்றன.

அதேபோல, உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள அனைத்து அரசு பல்கலைக் கழகங்களிலும் முனைவர் பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கையானது அந்தந்த பல்கலைக்கழக அளவில் இணைய வழியிலான ஒற்றைச்சாளர கலந்தாய்வு மூலம் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.



மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான இடத்தினை தேர்வு செய்யும் வகையில் பாடப்பிரிவு துறைகள் மற்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும் அவர்களிடம் உள்ள முனைவர் படிப்பிற்கான காலியிடங்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கப்படும்.

மாணவர்கள் தங்களது ஆராய்ச்சி புலம், நிறுவனம் மற்றும் மேற்பார்வையாளர்கள் குறித்த விருப்பங்களை தாங்களே தேர்வு செய்யலாம். இது மாணவர்களின் கல்விசார் நலன்களை பாதுகாப்பதுடன் சேர்க்கையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும்.

இந்த நடைமுறைகளை மாநில அளவில் கண்காணிக்க ஒருங்கிணைக்கப்பட்ட மென்பொருள் உருவாக்கப்பட்டு கண்காணிக்கப்படும். இதன் மூலம் மாணவர் சேர்க்கையில் இருந்து, பாடநெறி முடித்தல் (*Coursework Completion*), ஆராய்ச்சி மேற்பார்வையாளர்கள் ஒதுக்கீடு மற்றும் ஆய்வறிக்கை சமர்ப்பித்தல் வரை அனைத்து நிலைகளையும் கண்காணிக்க இயலும்.

மேலும், மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல் வழங்கவும், சேர்க்கை மற்றும் ஆராய்ச்சி தொடர்பான சந்தேகங்களைத் தீர்க்கவும் இதில் வழிவகை செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் குறிப்பிட்டார்.